திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு விற்பனை: பணம் கிடைக்காமல் விவசாயிகள் அவதி**

First Published : 06 Jul 2011 04:18:09 AM IST



தஞ்சாவூர்: அரைவைப் பருவம் முடிந்தும், கொள்முதல் செய்யப்பட்ட கரும்புகளுக்கு இரு சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் இதுவரை பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றன.

மத்திய அரசின் கரும்பு கட்டுப்பாட்டு ஆணைப்படி, வயலில் இருந்து ஆலைகளுக்கு கரும்பு அனுப்பியதிலிருந்து 15 நாள்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட வேண்டும். ஆனால், ஏப்ரல் 15-ம் தேதிக்கு பிறகு அரைவைக்கு எடுக்கப்பட்ட கரும்புகளுக்கு இதுவரை விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படவில்லை.

கரும்பு கொள்முதல் செய்து இரண்டு மாதங்களாகியும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத திருமண்டலக்குடி, துகிலி கோட்டூரிலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளில் ஜூன் 20-ம் தேதியோடு அரைவைப் பருவமே முடிந்துவிட்டது.

இந்த இரண்டு ஆலைகளுக்கும் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கரும்பு சாகுபடி பரப்பளவு உள்ளது. அதனால், கரும்புக்கான கொள்முதல் பணம் கிடைக்காமல், இந்த மாவட்டங்களில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமே சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் தொகையை பட்டுவாடா செய்கின்றன.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அனைத்து கரும்பு விவசாயிகளும் ஏக்கருக்கு ரூ. 22,500 கடன் பெற்றுத்தான் சாகுபடி செய்துள்ளனர்.

இந்தக் கடன் தொகையை திரும்பச் செலுத்தாததால், விவசாயிகளுக்கு மீண்டும் கடன் அளிக்க இந்த வங்கிகள் மறுத்துவிட்டன. இதனால், பல விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகி உள்ளது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதல் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இங்குதான் 70 முதல் 75 சதம் விவசாயிகள் கடன் பெற்றுள்ளனர்.

இந்த ஆலைகளில் தினமும் 2,000 டன் வீதம் கடந்த இரண்டு மாதங்களில் 1.20 லட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அரசின் ஆதார விலையான டன் ஒன்றுக்கு ரூ. 1900 கணக்கின்படி சுமார் ரூ. 20 கோடி வரை விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டியுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டு விவாதிக்க தனியாக குறைதீர் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் விவசாயிகளின் விருப்பமாக உள்ளது. இதுதொடர்பாக தஞ்சை மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் கூறியது:

பணம் பட்டுவாடா செய்யாதது குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்தனர். உடனடியாக இரண்டு சர்க்கரை ஆலை நிர்வாகங்களிடமும் அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். ஜூன் 30-ம் தேதி பணம் பட்டுவாடா செய்வதாக ஆலைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இனியும் தாமதிக்காமல் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய ஆலைகளுக்கு மீண்டும் அறிவுறுத்தப்படும். கரும்பு விவசாயிகளுக்கு தனியாக குறைதீர் கூட்டம் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்றார் பாஸ்கரன்.

**மானியம் பெற்ற விவசாயிகள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைக்க வலியுறுத்தல்**

First Published : 05 Jul 2011 10:44:10 AM IST

கிருஷ்ணகிரி, ஜூலை 4: பாசனக் கிணற்றில் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் மானியம் பெற்ற விவசாயிகள் அப்பணியை விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் சி.நா.மகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்தி:

பாசனக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை செறிவூட்டும் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி மூலம் ரூ.4 ஆயிரம் மானியம் பெற்ற விவசாயிகள், தங்கள் கிணற்றுக்கு அருகில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கட்டமைப்பு பணியை முடித்து அதன் விவரத்தை தருமபுரி உதவி செயற்பொறியாளர் நிலநீர் உபகோட்ட அலுவலகத்தில் தெரிவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட விவசாயிககளுக்கு வழங்கபட்ட தொகையை 9 சதவிகிதம் தனி வட்டியுடன் வசூலிக்கப்படும் என்று ஆட்சியர் தெரிவித்தள்ளார்.

தினமலர்

**பெரியார், வைகை பாசன திட்டத்தின்கீழ் நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:00 IST.




பெரியார், வைகை பாசனத் திட்டத்தின்கீழ் மதுரை, தேனி மாவட்ட விவசாயிகள் பயனடைய நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. 45,500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய நாற்றங்கால் தயார் செய்கிறார்கள். நீர்த்தேக்கத்தில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீரையும், கிணற்றில் உள்ள தண்ணீரையும் உபயோகித்து விவசாயிகள் பயிர்செய்ய முடிவு செய்து இருக்கிறார்கள். விவசாயிகள் எடீடி 36, எடீடி 43, எடீடி 45 மற்றும் ஜே13 போன்ற நெல்

ரகங்களை சாகுபடி செய்ய இருக்கிறார்கள். இதுசமயம் விவசாய இலாகா அதிகாரிகள் ஆடுதுறை36, அம்பை 16 போன்ற குறுகிய கால நெல் ரகங்களை சாகுபடி செய்ய சிபாரிசு செய்து வருகின்றனர். தேவைப்படும் நெல் விதைகள், நுண்ணுயிர் உரங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் இவைகளை கிழக்கு விரிவாக்க அலுவலகம், ஒத்தக்கடை, கருப்பா யூரணி துணை அலுவலகங்களில் போதுமான அளவு இருப்பு வைத்து வினியோகம் செய்து வருகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நெல் உற்பத்தியை பல மடங்கு அதிகரிக்க "திருந்திய நெல் சாகுபடி முறையை' அனுசரித்து சாகுபடி செய்ய பிரசாரம் செய்து வருகின் றனர். இந்த முறையின் சிறப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

* ஏக்கருக்கு விதை அளவு 3 கிலோதான். சாதாரண முறை சாகுபடிக்கு தேவைப்படுவது 25 கிலோ.

* நாற்றங்கால் செலவு, நாற்று பறிக்கும் செலவு, நடவிற்கு செலவு புதிய முறையில் குறைவு.

* பயிர் வளர்ந்த மேல் களையெடுக்க செய்யும் செலவு குறைவு. ஏனெனில் கோனோவீடர் உபயோகம் நன்மை செய்கின்றது.

* கோனோவீடர் செயல்படும் போது மண்ணில் காற்று கலந்து மண் புரட்டி விடப்படுவதால் நுண்ணுயிர்களின் பணி ஊக்குவிக்கப்படுவதோடு ஊட்டச் சத்துக்கள் பயிருக்கு எளிதாகக் கிடைக்கிறது. இதனால் வேர் வளர்ச்சி சிறப்பாக வளர்ந்து பயிர் செழிப்பான வளர்ச்சியை அடைகின்றது. சாதாரணமாக ஆட்கள் களையெடுக்கும்போது இத்தகைய நன்மைகள் ஏற்படுவதில்லை.

* சாகுபடி சமயம் புதிய முறை சாகுபடியில் பாசன நீர் 30-40 சதவீதம் குறைவதோடு மின்சார உபயோகம் மற்றும் ஆட்கள் செலவு குறைவு.

* புதிய முறை சாகுபடியில் பயிர் கீழே சாய்வதில்லை. எலித்தொல்லை கிடையாது.

* சாதாரண முறையில் ஏக்கரில் 30 மூடை (மூடை 60 கிலோ) மகசூல் கிட்டும். புதிய முறையில் 45 மூடைகள் வரை மகசூல் கிட்டும். தானிய மகசூலோடு வைக்கோல் மகசூலும் கூடுதலாக கிட்டுகின்றது.

* தற்போது அம்பை-16 நெல்லினை சாகுபடி செய்யப் போகிறீர்கள். சாதாரண சாகுபடி முறையில் அம்பை-16 நெல் குறைவான தூர் வெடிக்கும் தன்மை கொண்டிருந்தாலும் புதிய முறையில் இந்த ரகம் அதிகத் தூர்கள் கொண்டதாக இருக்கும்.

விவசாயிகளுக்கு விஸ்தரிப்பு அதிகாரிகள் புதிய முறை அதாவது திருந்திய நெல் சாகுபடி முறையை செயல்விளக்கம் செய்துகாட்டி உதவி வருகின்றனர். விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை அனுசரித்து பயனடைய வேண்டும்.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**குறுகியகால நெல் சாகுபடி நுட்பங்கள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**

குறுவை பருவத்தில் மே-ஜூன் மாதத்தில் நெல் சாகுபடி துவங்கப்படுகிறது. குறுகியகால வயதுடைய 110 முதல் 125 நாட்கள் கொண்ட ரகங்களை ஆடுதுறை36, ஆடுதுறை 37, ஆடுதுறை 43, ஆடுதுறை 45, ஆடுதுறை 47, கோ.47 மற்றும் வீரிய ஒட்டு நெல் கோ.ஆர்.எச்.3 ஆகியவை ஏற்றவை.

ஒற்றை நாற்றாக ஒரு எக்டர் நடவு செய்ய சுமார் 7 முதல் 8 கிலோ விதையளவு போதுமானது. ஒற்றை நாற்றுகள் சரிவராத தருணத்தில் இரண்டு நாற்றுக்களாக நடவுசெய்ய 12 முதல் 15 கிலோ வரை தேவைப்படுகிறது.

ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் ஒரு லிட்டர் நீரில் கரைத்து 10 மணி நேரம் வைத்து நீரை வடிகட்டி, பின்னர் விதைக்கலாம். இவ்வாறு ஊறவைத்த விதையை நனைந்த கோணிச்சாக்கில் கட்டி மூடி 24 மணி நேரம் இருட்டில் வைத்து முளைகட்டி பின்னர் விதைக்க வேண்டும். 14 முதல் 18 நாட்கள் வயதுடைய நாற்றுக்கள் நடவு செய்ய ஏற்றவை.

நடவு வயல் நன்கு சேற்றுழவு செய்யப்பட்டு மிகவும் சீரான முறையில் சமன் செய்யப்பட வேண்டும். வரிசைக்கு வரிசை 25 செ.மீ. இடைவெளியும் பயிருக்கு பயிர் 25 செ.மீ. என்ற அளவில் நாற்றுக்கள் நடவு செய்யப்பட வேண்டும். இளம் நாற்றுக்களின் பயிர் பிடிப்புத்திறன், தூர்கட்டி வளரும் திறன் அதிகமாக உள்ளதால் அதிக தூர்கள் பிடித்து விளைச்சல் அதிகரிக்கும். நாற்றுக்கள் பாத்திகளிலிருந்து பிரிந்த 30 நிமிடங்களுக்குள் நடவு செய்ய வேண்டும்.


நெற்பயிருக்கு சாதாரணமாக காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர்ப்பாசனம் செய்யலாம். அதாவது மண் மறைய நீர்கட்டுதல் நடவு செய்த முதல் 10 நாட்களில் மிக முக்கியம். பின்னர் சுமார் 1 முதல் 2 செ.மீ. அளவிற்கு நீர்ப்பாசனம் செய்து வயலில் மண்ணில் சிறு கீறல்கள் ஏற்படும் தருணம் அடுத்தமுறை நீர் பாய்ச்சுதல் வேண்டும். இம்முறை பூங்கதிர் உருவாகும் தருணத்திலிருந்து அறுவடை நிலை வரை 4 முதல் 5 செ.மீ. அளவிற்கு நீர் பாய்ச்சி கட்டிய நீர் மறைந்த உடன் மீண்டும் நீர் கட்டிட வேண்டும்.

சதுர நடவு முறையில் நடவு செய்யப்படுவதால் கோனோவீடர் என்ற உருளைக் களை எடுப்பானைப் பயன்படுத்தி களை கட்டுப்பாடு செய்யலாம். இவ்வாறு களை எடுப்பது நட்ட 10 நாட்களிலேயே செய்யப்பட வேண்டும். 10 நாட்கள் இடைவெளியில் மீண்டும் 2 அல்லது 3 முறைகள் உருளைக் களைக் கருவியைப் பயன்படுத்தி களைகளை வயலிலேயே மடக்கிவிடுவதால் பயிருக்கு உரமாவதோடு மண்ணின் வளமும் பாதுகாக்கப்படுகிறது.

பயிர்களுக்கு இடையே வேருக்கு அருகில் உள்ள களைகளைக் களைய, கைக்களை எடுப்பது அவசியம்.
பயிரின் ஆரம்பகாலத்தில் களைகளைக் கட்டுப் படுத்த பூட்டாக்குளோர் என்ற களைக்கொல்லியை 2.5 லிட்டர்/எக்டர் என்ற அளவில் பயன்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தலாம்.
பயிர் நன்கு வளர இயற்கை மற்றும் செயற்கை உரங்களை இடவேண்டும். கோடையில் சணப்பை, தக்கைப்பூண்டு பயிரிட்டு மடக்கி உழுதுவிடலாம். இதனுடன் எக்டருக்கு 120:38:38 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் பரிந்துரைக்கப்படுகின்றது. தழை, சாம்பல் சத்துக்களை பிரித்து இடுவதால் பயிர் வளர்ச்சி அதிகரிக்கிறது.
எக்டருக்கு 25 கிலோ ஜிங்க் சல்பேட்டை ஒரு கிலோ உலர்ந்த மணலுடன் கலந்து உழுது சமன்படுத்தப்பட்ட வயலில் நடவுக்கு முன் பரவலாக மண்ணின் மேற்பரப்பில் தூவிவிட வேண்டும். பொதுவாக மணிச்சத்து உரங்களை அடியுரமாக இடவேண்டும்.
பரிந்துரைக்கப்பட்டுள்ள பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உயர்விளைச்சல் பெறலாம். (தகவல்: செ.ராதாமணி, ச.ராபின், பு.முத்துகிருஷ்ணன், நெல்துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 033. 94430 07371).
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**அறுவடைக்குப்பின் தானிய பாதுகாப்பு முறைகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:00 IST



தானிய சேதார பூச்சிகளை கட்டுப்படுத்த சில முறைகளை மட்டும் கடைபிடிப்பதன் மூலம் முழுமையாக இவைகளை கட்டுப்படுத்திட முடியாது. ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளே தானிய சேமிப்புக்கு மிக்க உகந்தது.

**ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகள்:**

* அறுவடையின்போதே பூச்சிகளின் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்.
* விளைபொருட்கள் சேமிக்கப்படும் இடத்தின் சுற்றுப்புற சூழ்நிலையை நன்கு பாதுகாத்தல்.

* விளைபொருட்களின் ஈரத்தன்மையை சரியான அளவில் பராமரித்தல்.

* விளைபொருட்கள் காயவைக்கும் களங்கள், கோணிப்பை, குதிர்கள் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றில் பூச்சிக்கொல்லிகள் தெளித்தல்.

* தானியங்கள் சேமித்து வைத்தபிறகு பூச்சிகள் வரும் முன்னரும் பூச்சிகள் தாக்கிய பின்னரும் பூஞ்சாண கொல்லிகளை தெளித்து கட்டுப்படுத்துதல்.

* தானியங்களுடன் சிலரக தாவர பொருட்களை கலந்து சேமித்து பூச்சிகளை கட்டுப்படுத்துதல்.

* ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கடைபிடித்தல்.

* அறுவடையின்போது பாதுகாத்த விளைபொருட்களை உற்பத்தியாகும் வயல்களில் இருந்து, சேமிப்பு கிடங்கிலிருந்து மற்றும் சேமிப்பு கலன்களில்இருந்தும் பூச்சி, பூஞ்சாணம் தாக்கி இழப்பை அதிகரிக்கின்றன. இதனை தடுக்க மாலத்தியான் 0.1 சதம் அளவில் சேமிப்பு கிடங்கிலும் கலன்களிலும் தெளிப்பது அவசியம்.

**சுற்றுப்புறத் தூய்மையை பராமரித்தல்:** சுவர், தரை, கதவு, சன்னல், இடுக்குகள், குதிர்கள் இவற்றின் மீதும் மூடைகளை நகர்த்தும்போதும் ஆங்காங்கே பறந்தோ ஊர்ந்தோ சென்று பூச்சிகள் பரவுகின்றன. விளைபொருட்களை சேமிக்கும் முன்பு கொள்கலன்கள் மற்றும் அறைகளை பூச்சி மற்றும் பூஞ்சாணம் இல்லாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். சேமிப்பு அறைகளின் துவாரங்கள், சுவர்விரிசல் ஆகியவற்றில் வெடிப்பு அற்றதாக சிமென்ட் பூசி, சீர்செய்ய வேண்டும். எலிவளை இருப்பின் அதை முற்றிலும் எலி தாக்காமல் சீர்செய்ய வேண்டும். சுவர்களை பாதுகாப்பது மிகவும் அவசியம். கதவுகளின் கீழ் பகுதிகள் 25 செ.மீ. வரை இரும்பு தகட்டால் அடைக்க வேண்டும். சேமிப்பு அறையின் சன்னல், காற்று வெளியேற்றும் மின்விசிறி பொருத்தியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் இரும்புவலை சன்னல்கள் பொருத்த வேண்டும். தானியங்களின் ஈரத்தன்மையை பராமரிக்க சேமிக்கப்படும் தானியங்களை சிபாரிசு செய்யப்படும் ஈரப்பதத்திற்குள் காயவைத்து சேமிக்க வேண்டும். பொதுவாக ஈரப்பதம் 8 முதல் 10 சதத்திற்குள் இருக்கும்படியாக பார்த்துக்கொள்ள வேண்டும். ஈரப்பதம் பூச்சிகளின் இனப்பெருக்கத்திற்கு உகந்ததாக இருப்பது மட்டுமல்லாமல் பூசணங்களின் வளர்ச்சியையும் அதிகப்படுத்துகின்றன. இதனால் தானியங்கள் நிறம்மாறி துர்நாற்றம் ஏற்பட்டு உண்பதற்கு தகுதியற்றதாகிவிடும். எனவே, ஈரப்பதத்தைச் சரியான அளவில் வைத்திருப்பது மிகவும் அவசியம் ஆகிறது.
தொடர்புக்கு: துணை இயக்குனர், வேளாண்மை வணிகம், ராமநாதபுரம். போன்: 04567-220 245.
-கே.சத்தியபிரபா, உடுமலை.

**மானாவாரி நிலக்கடலையில் வேர் அழுகல் நோய் தாக்குதல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,01:33 IST

பள்ளிபாளையம்: "மானாவாரி நிலக்கடலையில் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை கையாள வேண்டும்' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: பள்ளிபாளையம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மானாவாரி நிலக்கடலையில் வேரழுகல் நோய் தாக்குதல் வர வாய்ப்பு உள்ளது. நிலக்கடலை பயிரின் இளம் பருவ செடிகளை அதிக அளவில் தாக்கக் கூடிய இந்நோயைக் கட்டுப்படுத்த வேண்டும். நோய் தாக்கிய செடிகளின் இலைகள் மஞ்சளாக மாறி, சில தினங்களில் கருகி விடும். மண்ணைத் தொட்டுள்ள நிலக்கடலைச் செடியின் குருத்துப்பாகத்தில் முதலில் நீர் கசிவுடன் கூடிய கரும்சிவப்பு அல்லது பழுப்பு நிற புள்ளிகள் தோன்றும். இப்புள்ளிகள் தண்டுப்பகுதியை சுற்றிப்பரவி பின் கருத்துப்பகுதி அழுகி செடி முழுவதும் சில நாட்களில் கருகி மடிந்து விடும். நோயினால் தாக்கபபட்ட வேர் பகுதியில் உள்ள பட்டைகள் சிதைந்து வேர்கள் அழுகிவிடும். வேரழுகல் நோய் தாக்கிய செடிகளை உடனுக்கடன் அகற்றி எரித்து விடவேண்டும். வெப்பநிலை அதிகமாக காணப்படும் போதும், நீர் பற்றாக்குறை அதிகம் உள்ள போதும் வேரழுகல் நோய் தாக்குதல் அதிகரிக்கும். நிலக்கடலை விதைகளை எதிர் பூசான மருந்து டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் என்ற அளவில் கலந்து விதைத்தால், வேரழுகல் நோயின் தாக்குதல் குறையும். நிலக்கடலை விதைத்த, 30ம் நாளில் எதிர்பூசான மருந்து சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் ஒரு கிலோவை மக்கிய தொழு உரத்துடன் கலந்து, ஒரு ஏக்கருக்கு இட வேண்டும். நோய் தாக்கிய செடிகளை பிடுங்கி அழித்த பின், கார்பன்டசீம் பூசான மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் கலந்து செடிகளை சுற்றி நன்கு நனையுமாறு ஊற்ற வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான சூடோமோனாஸ் எதிர் பூசான மருந்து தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டு பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையம் மூலம், முழு விலைக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மஞ்சளுக்கு கூடுதல் விலை: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,01:32 IST

திருச்செங்கோடு: டி.சி.எம்.எஸ்.,சில் நடந்த மஞ்சள் ஏலத்தில், குவிண்டாலுக்கு, 500 முதல் 1,000 ரூபாய் வரை விலை அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி, எள் ஆகியவை வாரம் தோறும் ஏலம் விடப்படுகிறது. கடந்த சில மாதங்களாக, வாரம் தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம்

நடத்தப்படுகிறது. அதில் திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஆத்தூர், ராசிபுரம், கொளத்தூர் மற்றும் பெரம்பலூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஆயிரம் மூட்டை மஞ்சளை கொண்டு வந்து குவித்தனர். இந்த வாரம் நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் குவிண்டால், 8,699 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் 7,789க்கும், உயர்தர பனங்காலி மஞ்சள் 20 ஆயிரத்து 539 ரூபாய்க்கும் விற்பனையானது. இந்த வார விற்பனை, 40 லட்சம் ரூபாயை எட்டியது. கடந்த வாரத்தோடு ஒப்பிடும் போது, இந்த வாரம் குவிண்டாலுக்கு, 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை கூடுதலாக ஏலம் போனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நெற்பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்த : வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,01:37 IST

தூத்துக்குடி : நெற்பயிரில் பூச்சிகளின் பெருக்கத்தை தவிர்க்க வேளாண்மை அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.

நெற்பயிர் விதை விதைத்தது முதல் அறுவடை வரையில் பயிரில் பல்வேறு பூச்சிகள் தோன்றி சேதம் விளைவிக்கின்றது. பயிரில் அவ்வப்போது தோன்றும் பூச்சிகளை பல்வேறு முறைகளில் கணித்து பூச்சிகளின் எண்ணிக்கை, பயிர் சேதம் ஆகியவற்றைக் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சேதம், பொருளாதார சேதநிலையை எட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நெற்பயிரில் பூச்சிகளின் பெருக்கத்தைத் தவிர்க்க கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த பூச்சிக்கட்டுப்பாடு முறைகளை கடைப்பிடிக்கலாம். நீர் தேங்காமலும், போதிய வடிகால் வசதி இருக்குமாறும் நடவு வயலை நன்றாகச் சமன் செய்ய வேண்டும். ஒரு பகுதியில் அமைந்துள்ள எல்லா வயல்களிலும் குறுகிய கால இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நாற்றுக்களை வரிசை நடவு செய்ய வேண்டும். வரிசை நடவு இயலாத நிலையில் 8 அடிக்கு 1 அடி இடைவெளியிட்டு பாத்தி நடவு செய்தல் வேண்டும். பரிந்துரை செய்யப்படுகின்ற உர அளவிற்கு மேல் உரமிடுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். வேப்பம்புண்ணாக்கு, வேம்பு கலந்த யூரியா உரங்களை மேலுரமாக உபயோகிக்கலாம். நீர் பராமரிப்பு மிகவும் அவசியமாகும்.

வயல் வரப்புகளில் காராமணி, பாசிப்பயறு போன்றவற்றை பயிரிட்டு பூச்சிகளின் இயற்கை எதிரிகளைப் பெருக்கலாம். நடவு செய்த 10 முதல் 20 நாட்களுக்குள் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டம், எண்ணிக்கை, சேதம் ஆகியவற்றைக் கணித்திடலாம். குருத்துப் பூச்சியின் சேதத்தைத் தவிர்க்க இனக் கவர்ச்சிப் பொறி வைத்து ஆண் பூச்சிகளை வெகுவாகக் குறைத்திடலாம். பூச்சிகளின் தாக்குதலை தாங்கி வளரக்கூடிய ரகங்களை இயன்ற அளவு பயிரிடலாம். உயர் விளைச்சல் ரகங்களை உகந்த பருவத்தில் மட்டுமே பயிரிடல் வேண்டும். பொருளாதார சேத நிலையை பூச்சிகள் எட்டிவிட்டால் பரிந்துரை செய்யப்படுகின்ற பூச்சிக் கொல்லிகளை சரியான அளவில் பயிரில் நன்குபடும் படி தெளிக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகள்

உபயோகிக்கும் முன் வயலில் நீரை நன்கு வடிகட்ட வேண்டும். பூச்சிக்கொல்லிகளை அதிகாலை துவங்கி முற்பகல் 10 மணி வரையிலும், பிற்பகல் 4 மணிக்கு மேல் மாலை 6 மணி வரையிலும் வயலில் உபயோகிக்கலாம்.

மழைக்காலங்களில் பூச்சிக் கொல்லி கலவையுடன் திரவ ஒட்டிகளைக் கலந்து உபயோகிக்க வேண்டும். ஆண்டுதோறும் வயல் வரப்புகளை வெட்டுதல், கிட்டிகள் வைத்தல் போன்றவற்றின் மூலம் எலிக் கட்டுப்பாடு செய்திடலாம். பூச்சிகளின் மறு உற்பத்தியை ஊக்குவிக்கும் திறன் கொண்ட பூச்சிக்கொல்லிகளை உபயோகித்தல் கூடாது. மேற்கண்ட ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கடைபிடித்து நெற்பயிரில் குறைந்த செலவில் நிறைவான மகசூலைப் பெற்றிடலாம் என உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**ரூ.2 கோடியில் பாசன பராமரிப்பு திட்டம் :பொதுப்பணித்துறை நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:35 IST

ஓசூர் : தேன்கனிக்கோட்டை அருகே சன்னத்குமார் நதி, தளி பெரிய ஏரி ஆகியவற்றை பராமரிக்க 2 கோடி ரூபாயில் விவசாய பாசனம் திட்டத்தை தயாரித்து பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். தேன்கனிக்கோட்டை அருகே தமிழக, கர்நாடகா வனப்பகுதியில் "மாஸ்திகல்லா' மலையில் உற்பத்தியாகும் சன்னத்குமார் நதி தளி பெரிய ஏரியில் தேக்கி வைக்கப்படுகிறது. ஏரி மூலம் 200 ஏக்கர் விவசாய நிலங்கள் ஆண்டு முழுவதும் பாசன வசதி பெறுகிறது. அதன் பின் அங்கிருந்து தர்மபுரி மாவட்டம் பஞ்சப்பள்ளி அணைக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பஞ்சப்பள்ளி அணையில் தேக்கி வைக்கப்படும் சன்னத்குமார் நதி தர்மபுரி மாவட்டத்தின் நீர் பாசனம், குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. இதையடுத்து இரு தடுப்பணைகளை தாண்டி நல்லூர் அணையை கடந்து ஒகேனக்கல் அருகே காவேரி ஆற்றில் சன்னத்துக்குமார் நதி கலக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் சன்னத்துக்குமார் நதி கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்ட விவசாய பாசனம், குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதால் இந்த நதி நீர் வழித்தடத்தை பராமரிக்க தமிழக பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த 2005ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெய்த கன மழையில் சன்னத்குமார் நதி வெள்ள பெருக்கு ஏற்பட்டு, தளி பெரிய ஏரி நிரம்பி உடைந்தது. அதனால், அப்பகுதி விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியது. சாலைகள் அரிக்கப்பட்டு பாதாள பள்ளங்கள் ஏற்பட்டது. இந்த உடைந்த பகுதி இதுவரை பராமரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால், தளி பெரிய ஏரியில் முழுமையான அளவு தண்ணீர் தேக்கி வைக்க முடியவில்லை. ஏரி கரையோரம்

அரிக்கப்பட்டதால், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது சன்னத்துக்குமார் நிதி வழித்தடத்தை மேம்படுத்தி தளி ஏரி பராமரித்து உடைப்பை சீர் செய்ய நபார்டு வங்கி உதவியுடன் 2 கோடி ரூபாயில் பொதுப்பணித்துறையினர் நீர் பாசனம் பராமரிப்பு திட்டத்தை தயாரித்துள்ளனர்.

இந்த திட்டத்தில் தளி பெரிய ஏரியில் உடைந்த கால்வாய்களை சீரமைக்கப்படுகிறது. சன்னத்துக்குமார் நிதி உற்பத்தியாகும் மாஸ்தி கல்லா மலைப்பகுதியில் இருந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த நதி பாய்ந்தோடும் பகுதிகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது, தளி பெரிய ஏரியில் கரைகள் உடைந்து, நீர் பாசன கால்வாய்கள் பாழடைந்து காணப்படுகிறது. ஏரி முழுவதும் ஆகாய தாமரைச்செடிகள் படர்ந்து காணப்படுகிறது. இதனால், மழை காலத்தில் ஏரியில் முழுமையாக தண்ணீர் தேக்கி வைக்க முடியவில்லை. பாசன எல்லை வரை விவசாய நிலங்களுக்கு ஏரி நீர் சென்றடைவதில்லை. இதனால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏரியில் சுற்றுலா பயணிகள் படகில் சென்று ஏரியின் இயற்கை அழகை பார்வையிட படகு போக்குவரத்து செயல்படுகிறது. ஆகாய தாமரைச்செடிகள் படர்ந்துள்ளதால், படகு போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது ஏரி நீர் மாசு அடைந்து வருகிறது. இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது: ஆகாய தாமரைச்செடிகளை ஏரியில் வளர முடியாமல் முழுமையாக அகற்றமுடியாது. இந்த செடிகளை அகற்ற ஒரு வித கெமிக்கல் பொருட்களை ஏரியில் போட வேண்டும். இவ்வாறு செய்தால் ஏரி நீர் கெமிக்கல் கலந்து விவசாய பயிர்கள் பாதிப்படை வாய்ப்புள்ளது. அதனால்தான் தற்காலிகமாக முடிந்தளவு ஆகாயதாமரைச்செடிகளை பிடுங்கி அப்புறப்படுத்தி வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**மான்ய விலையில் உரம்: குத்தகை விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:43 IST

வேலாயுதம்பாளையம்: "புகளூர் வட்டார விவசாயிகளுக்கு அரசு வழங்கும் உரம் மற்றும் வா ழை பூச்சி மருந்துகள் அனைத்தும் குத்தகை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும்' என கோரிக்கை எழுந்துள்ளது. புகளூர் சுற்றுப்பகுதியில் நொய்யல், சேமங்கி, மரவாபாளையம், நடையனூர், திருக்காடுது றை, புகளூர், பால்துறை, செம்படாபாளையம், தோட்டக்குறிச் சி உ ட்பட சுற்றுப்புற பகுதிகள் முழுவதும் 5,000க்கும் மேற்பட் ட ஏக்கர் பரப்பளவில் வெற்றி லை சாகுபடிசெய்யப்படுகிறது. வெற்றிலை சாகுபடியை நம்பி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தி னக்கூலி தொழிலாளர்கள் வே லை செய்து வருகின்றனர். தற்போது ஆடிப்பட்டம் வெற்றிலை நடவு பணிகள் துவங்குவதற்காக கடந்த மாதம் கிடங்கு வெட்டும் பணி நடந்தது. தொ டர்ந்து அவுரி, முருங்கை, அகத்திகீரை, வாழைமரம், விதை மற்றும் கன்றுகள் மூலம்

நடவு செய்யப்பட்டு அதன் வளர்ச்சியை விவசாயிகள் மிகுந்த ஆவலுடன் கவனித்து வருகின்றனர். தற்போது, நடவு செய்யப்பட்டுள்ள செடிகள் ஆறு அடி உயரத்துக்கு மேல் வளர்ந்த பிறகு விட்டம் என்று குறிப்பிட்ட செடிகளை ஒன்று சேர்த்து கட்டுவர். வரும் ஆடி மாதத்துக்குள் இந்த மரச்செடிகள் நன்கு வளர்க்கப்பட்ட உடன்தான் வெற்றிலை கொடி நடவு பணி துவங்கும். வெற்றிலை நடவுக்கு முன் பட்டத்தில் இரண்டு முறை பூச்சிக்கொல்லி மருந்துகளும் அதன்பின் போதிய வளர்ச்சிக்கான உரமும் வைக்க வேண்டும். இவற்றினை பராமரிக்க அரசு வேளா ண் மை துறை மூலம் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து வழ ங்குவது வழக்கம். ஆனால், இØ வ முறையாக அனைத்து விவசாயிக்கும் கிடைப்பதில்லை. குறிப்பாக நிலத்தை குத்தகை எடுத்து ள்ள விவசாயிகள், அதிக விலை கொடுத்து வெளி மார்க்கெட்டில் உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை வாங்குகின்றனர். எனவே, குத்தகை எடுத்துள்ள விவசாயிகளின் பெயரையும் அரசு பட்டியலில் சேர்த்து, உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை மான்ய விலையில் வழங்க வேண்டும்' என கோரிக்கை வைத்துள்ளனர்.

## 13,000 ஹெக்டேரில் குறுவை சாகுபடி திருவாரூர் மாவட்ட கலெக்டர் தகவல்

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:15 IST

திருவாரூர்: "திருவாரூர் மாவட்டத்தில் இதுவரையில் 13 ஆயிரம் ஹெக்டரில் குறுவை பயிர் நடவு செய்யப்பட்டுள்ளது' என மாவட்ட கலெக்டர் முனியநாதன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நடப்பாண்டில் குறுவை பட்டத்தில் 38 ஆயிரம் ஹெக்டரில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரையில் இயல்பான முறையில் 1,315 ஹெக்டரிலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் 215 ஹெக்டரிலும் நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 29ம் தேதி வரையில் இயல்பான முறையில் 9,685 ஹெக்டர், திருத்திய நெல் சாகுபடி முறையில் 3,410 ஹெக்டர் என மொத்தம் 13 ஆயிரத்து 95 ஹெக்டரில் நடவு பணிகள் முடிந்துள்ளன. குறுவை பட்டத்துக்கான தனியார் விதை விற்பனை நிலையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக 1355.8 மெட்ரிக் டன் வரை நெல் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. இதில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (நெல்) திட்டத்தின் கீழ் 700 மெட்ரிக் கடன் விதை நெல் கிலோ ஒன்றுக்கு ஐந்து ரூபாய் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. யூரியா உரம் இதுவரையில் 2,481 மெட்ரிக் டன் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் 7,736 மெட்ரிக் டன் யூரியா இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதேபோல் டி.ஏ.பி., உரும் 1,371 மெட்ரிக் டன் வினியோகம் செய்யப்பட்டு, 3,679 மெட்ரிக் டன் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களும் தேவையான அளவு வினியோகம் செய்யப்பட்டு இருப்பிலும் வைக்கப்பட்டுள்ளது. உயிர் உரங்கள் மற்றும் நெல் நுண்ணூட்ட கலவை உரங்கள் தேவையான அளவில் அனைத்து வேளாண்மை

விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுவை பருவத்துக்கு 682 கோடி ரூபாய் மதிப்பில் பயிர் கடன் வழங்க திட்டமிட்டு கடந்த 29ம் தேதி வரையில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 3.58 கோடி ரூபாயும், தேசிய வங்கிகள் மூலம் 5.84 கோடி ரூபாய் என மொத்தம் 9.42 கோடி ரூபாய் பயிர் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தற்போது 96 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகிறது. 2010-11 காரீப் பருவத்தில் கடந்த 29ம் தேதி வரையில் ஐந்து லட்சத்து எட்டாயிரத்து 644 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**மாங்கனி கண்காட்சியில் மா விவசாயிகளுக்கு ஆறு நாள் கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,00:36 IST

கிருஷ்ணகிரி : கிருஷ்ணகிரியில் நடந்து வரும் அகில இந்திய மாங்கனி கண்காட்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆறு நாள் கருத்தரங்குகள் நடக்கிறது. கலெக்டர் மகேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் 19வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடந்து வருகிறது. இதில், விவசாயிகள் பயன்பெறும் வகையில் கடந்த 4ம் தேதி முதல் வரும் 12ம் தேதி வரை பல்வேறு துறைகளின் சார்பில் ஆறு கருத்தரங்குகள் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் (ஜூலை 4) தோட்டக்கலை துறை சார்பில் கருத்தரங்கு நடந்தது. இன்று (ஜூலை 6) பிற்பகல் 3 மணிக்கு மீன்வளத்துறை சார்பிலும், 7ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு கால்நடை பராமரிப்பு துறை சார்பிலும், 8ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பிலும், 10ம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு சுகாதார துறை சார்பிலும், 12ம் தேதி பிற்பகல் 3 மணிக்கு வேளாண் பொறியியல் துறை சார்பிலும் கருத்தரங்குகள் நடக்கிறது. தொடர்புடைய துறை அலுவலர்கள் விவசாயிகளை ஒருங்கிணைத்து நுழைவு கட்டணமில்லாமல் இலவசமாக கண்காட்சிக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும். கண்காட்சியில் நடக்கும் இக்கருத்தரங்கில் விவசாயிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்று பயன் அடையலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஒரே நாளில் மஞ்சள் விலை ரூ.400 சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,01:40 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் சந்தைகளில் இரண்டு நாட்களில் குவிண்டாலுக்கு 400 ரூபாய் குறைந்துள்ளது. தினசரி ஏற்படும் மஞ்சள் விலை மாற்றத்தால் விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

ஈரோட்டில் கடந்த மாதம் விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் 5,546 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 8,279 ரூபாய் வரை ஏலம் போனது. கிழங்கு மஞ்சள் தேவை குறைவால், குவிண்டால் குறைந்தபட்சம் 5,106 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 7,448 ரூபாய் வரை ஏலம் போனது. விலை சரிவு காரணமாக விவசாயிகள் குறைந்தளவே மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நான்கு மாதங்களுக்கு முன் ஈரோடு மஞ்சள் சந்தைகளுக்கு தினசரி சராசரியாக 10 ஆயிரம் ரூபாய் வரை வரத்தானது. போதிய விலை கிடைக்காததால், தற்போது நான்கு சந்தைகளிலும் தினசரி 2,000 மூட்டைகளே வருகிறது. சென்ற மாதம் இறுதியில் மஞ்சள் விலை ஏறுமுகமாகவே இருந்தது. அதையடுத்து, விவசாயிகளும் சந்தையில் இருப்பு வைத்திருந்த மஞ்சளை விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வந்தனர். இம்மாதம் துவக்கத்தில் விரலி குவிண்டால் 7,558ல் இருந்து அதிகபட்சமாக 8,419 ரூபாய்க்கு விற்றது. கிழங்கு 7,106ல் இருந்து அதிகபட்சமாக 7,606 ரூபாய்க்கு விற்றது. நேற்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விரலி 7,193ல் இருந்து அதிகபட்சமாக 7,819 ரூபாய், கிழங்கு 6,939ல் இருந்து அதிகபட்சமாக 7,444 ரூபாய்க்கு ஏலம் போனது. 325 மஞ்சள் மூட்டைகள் வரத்தானதில் 302 மூட்டைகள் விற்றன. வெளிமாநில வியாபாரிகள் வருகை குறைவால், திங்களை விட, நேற்று விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரையும், கிழங்கு 300 ரூபாய் வரையும் விலை குறைந்துள்ளது. தினசரி அரங்கேறும் மஞ்சள் விலை மாற்றத்தால் விவசாயிகள் நாளை மஞ்சள் விலை குறையுமா? ஏறுமா? என, தெரியாமல் தவிக்கின்றனர்.

**கரும்புக்கு ரூ.3,000 விலை கோரி பேரணி**

பதிவு செய்த நாள் : ஜூலை 06,2011,01:42 IST

ஈரோடு: தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், உழவர் தின பேரணி மற்றும் மாநாடு ஈரோட்டில் நேற்று நடந்தது. தமிழகத்தில் விவசாய போராட்டங்களின் போது உயிர்த் தியாகம் செய்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்து, வாரிசுகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். கரும்பு விலை டன்னுக்கு 2,500 ரூபாயை நடப்பு பருவத்தில் வழங்க வேண்டும். வரும் சீஸனுக்கு கரும்புக்கு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் ஏற்று, வயல் விலையாக ஒரு கிலோ சர்க்கரையுடன், 3,000 ரூபாய் விலையாக மத்திய மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும். நெல் குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் அறிவித்து, நெல் கொள்முதல் நிலையம் துவங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. சி.என்.கல்லூரியில் துவங்கிய பேரணி, செல்லாயம்மாள் மண்டபத்தில் நிறைவுற்றது. தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் வெங்கிடாசலம் தலைமை வகித்தார். மாநில கொள்கை பரப்பு செயலாளர் நந்தகோபால் வரவேற்றார். மாநில துணைத்தலைவர் பாலாஜி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் செங்கோட்டையன் நன்றி கூறினார்.

**பெரியாறு அணை நீர்மட்டம் குறைவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,21:16 IST

கூடலூர் : பெரியாறு அணை நீர்பிடிப்பில் மழை குறைவால் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. தென்மேற்கு பருவ மழை முன்கூட்டியே துவங்கினாலும், பெரியாறு அணை நீர்பிடிப்பில் போதிய அளவு பெய்யவில்லை. கடந்த மாதம் துவக்கத்தில் பெய்த மழையால் நீர்மட்டம் உயர்ந்து 125.90 அடி வரை எட்டியது. அதன்பின் பருவ மழை தீவிரமடையாததால், அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து, நீர்மட்டமும் குறையத் துவங்கியது. அணைக்கு நீர்வரத்தைக் காட்டிலும், நீர்திறப்பு அதிகமாக இருப்பதால் நீர்மட்டம் வெகுவாக குறைந்து 121 அடியாக உள்ளது.

நீர்வரத்து 272 கன அடியாகவும், நீர்திறப்பு 1176 கன அடியாகவும் உள்ளது. நீர் இருப்பு 2866 மில்லியன் கன அடியாகும். தற்போது, நீர்பிடிப்பு பகுதியில் மேகமூட்டத்துடன் இருந்த போதிலும், மழையில்லாததால் நீர் மட்டம் மேலும் குறையும் வாய்ப்புள்ளது.

**விவசாய மானியம் பெற அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,21:08 IST

சிவகங்கை : சிவகங்கை விவசாய உதவி இயக்குனர் ராஜா அறிக்கை: விவசாயிகள் அரசு மான்யம் பெற, உதவி விவசாய அலுவலர்கள் அந்தந்த பகுதிக்கு வருவார்கள். அவர்களிடம் நன்செய், புன்செய் சாகுபடி பரப்பிற்கு ஏற்ப, இடுபொருட்கள், கருவிகள் பெறுவதற்காக, விவசாயிகள் 10(1) சிட்டா அடங்கல் வைத்திருக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு உதவி விவசாய அலுவலர்கள், சிவகங்கை - 94424 73618, பெரியகோட்டை - 95661 83159, தமறாக்கி - 98421 90786, ஒக்கூர் - 94436 78133, மதகுபட்டி - 98651 31151-ல் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

**செம்மை நெல் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,23:17 IST

வேப்பம்பட்டு:திருவள்ளூர் அடுத்த திருவூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில், செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.தமிழ்நாடு வேளா ண்மை பல்கலைக்கழகம் சார்பில், உலக வங்கி நிதியுதவியுடன் நீர் வள, நில வளத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி குறித்த தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.இந்நிலையில், திருவள்ளூர் அருகே,

திருவூரில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கொற்றலை ஆறு உபவடி நீர் பகுதிக்குட்பட்ட பகுதி விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடந்தது. இதில், ஈக்காடு வட்டத்தைச் சேர்ந்த கல்யாணகுப்பம், வீரராகவபுரம் கிராமங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் மாணிக்கம் பயிற்சியை துவக்கி வைத்து செம்மை நெல் சாகுபடி முறையின் முக்கியத்துவம் குறித்து பேசினார். செம்மை நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரிப்பு, சதுர முறை நடவு, கோனோவீடர் இடை உழவு, நடவு வயல் மேலாண்மை ஆகியவை குறித்து உழவியல் பேராசிரியர் முரளிதரன் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

**தாவரவியல் பூங்காவில் விதை சேகரிப்பு தீவிரம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 05,2011,23:16 IST

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் செடிகளுக்கான விதை சேகரிப்பு பணி துவங்கியுள்ளது. கோடை சீசனின் போது, லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஊட்டி வந்து செல்கின்றனர். அவர்களை கவரும் வகையில் ஆண்டுதோறும் ஊட்டி தாவரவியல் பூங்காவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறை சார்பில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதற்கென பூங்காவில் 200க்கும் மேற்பட்ட ரகங்களில் 2 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்படுவது வழக்கம். சுற்றுலா பயணிகள் பார்வைக்காக 15 ஆயிரம் தொட்டிகளில் மலர் நாற்றுக்கள் நடவு செய்யப்படும். இந்த மலர் செடிகளுக்கான விதைகள், மலர்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, பின் பூங்கா நாற்றங்கால்களில் விதைக்கப்படும்; இதில் உற்பத்தியாகும் நாற்றுக்கள், பூங்காவில் உள்ள பாத்திகளில் நடவு செய்யப்படும்; இவ்வாறு வளர்க்கப்படும் செடிகள் தான், மலர் கண்காட்சியின்போது பூத்துக்குலுங்கி, பார்வையாளர்களை வசீகரிக்கும்.

இத்தகைய தொடர் பணிகளின் முதல் நடவடிக்கையாக, மலர்ச்செடிகளின் விதை சேகரிப்பு பணிகள், ஊட்டி தாவரவியல் பூங்காவில் தற்போது துவக்கப்பட்டுள்ளன. பூங்காவில் உள்ள பெண் ஊழியர்கள் விதை சேகரிப்பு பணியில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். "இந்த விதைகள், அடுத்தாண்டு மலர் கண்காட்சிக்கான மலர் செடிகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும்' என்று அலுவலர்கள் தெரிவித்தனர்.

*காபி ஏற்றுமதி 45% உயர்வு*

*பி கே கிருஷ்ணகுமார்*
*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) காபி ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 45 சதவீதம் அதிகரித்து 1.19 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.*

*காபி விலை*

*சர்வதேச அளவில் காபி விலை, கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் உயர்ந்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தும் வகையில், நிறுவனங்கள் காபி ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்தின. முதல் காலாண்டில் சர்வதேச சந்தைகளில் காபிக்கு கிடைத்த விலை 42 சதவீதம் அதிகரித்து ரூ.136 (ஒரு கிலோ) ஆக உயர்ந்துள்ளது.*

*இதனை வெளிப்படுத்துகின்ற வகையில் மதிப்பின் அடிப்படையில் காபி ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில் 106 சதவீதம் அதிகரித்து ரூ.1,631 கோடியாக உயர்ந்துள்ளது. முதல் காலாண்டில் டாலர் மதிப்பு அடிப்படையில் காபி ஏற்றுமதி 117 சதவீதம் அதிகரித்து 36.40 கோடி டாலராக உயர்ந்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் முதல் காலாண்டில் ஒரு அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.47–ஆக இருந்தது. இது நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் ரூ.44.80–ஆக குறைந்துள்ளது. இதனால் டாலர் அடிப்படையில் ஏற்றுமதி 117 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 106 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது.*

*இந்தியாவிலிருந்து அதிக அளவில் காபியை இறக்குமதி செய்வதில் ஐரோப்பிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. இதுகுறித்து இந்திய காபி ஏற்றுமதியாளர்கள் சங்க தலைவர் ரமேஷ் ராஜா கூறுகையில், “கிரீஸ் நாட்டிற்கான காபி ஏற்றுமதி குறைந்துள்ளது. இருப்பினும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்படவில்லை. மேற்கு ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி சற்று உயர்ந்துள்ளது” என்று தெரிவித்தார்.*


*பிரேசில்*

*காபி உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பிரேசில் நாட்டின் காபி சர்வதேச சந்தைகளுக்கு வரத் தொடங்கி உள்ளது. எனவே இனிவரும் காலாண்டுகளில் வெளிநாடுகளில் காபி விலை குறைய வாய்ப்புள்ளது.*

தினகரன்

## தேயிலை மகசூல் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் 7/6/2011 1:6:32



வால்பாறை: கோவை மாவட்டம், வால்பாறையில் தென்மேற்கு பருவமழை ஜுன் முதல் தேதி துவங்கி 3 வாரங்கள் தொடர்ந்து பெய்தது. கடந்த 2 வாரங்களாக அவ்வப்போது சாரல் மழையாக மாறியுள்ளது. சாதகமான காலநிலை நிலவுவதால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. 2 வாரங்களாக பகலில் வெயிலும், அவ்வப்போது இளம்சாரலும் பொழிவதால் தேயிலை செடி வளர்ச்சிக்கு உகந்ததாக உள்ளது. பசுந்தேயிலை துளிர் விட்டு மகசூல் கிடைத்து வருகிறது.